JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **146-2012** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.1** | Prosecution /Defence / Court | |
| Name | **Raja @ Ramasamy** | Caste | |
| Father's Name | **Chellappagounder** | Calling | |
| Village | **Seelampatti** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 13.08.2024**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பெத்தாம்பாளையம் பைபாஸ் ரோட்டில் லட்சுமி பேக்கரி என்ற பெயரில் டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 01.07.2016 ம் தேதி அதிகாலை சுமார் 03.30 மணியளவில் நான் என்னுடைய கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது ரோட்டில் சத்தம் கேட்டு அங்கு சென்று பார்த்தேன்.

2) ஒரு கார் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டில் நடுவில் இருந்த தடுப்புச் சுவரில் மோதியதால் சத்தம் கேட்டது. அங்கு சென்று பார்த்தபோது அந்த காரானது கவிழ்ந்து கிடந்தது. மேற்சொன்ன காரில் 4, 5 நபர்களுக்கு காயம் இருந்தது. அந்த காரை ஓட்டி வந்தவர் செல்வராஜ் என்று சொன்னார்கள். நான் விபத்தின் போது ஓட்டுனரை பார்க்கவில்லை.

.

3) காரில் பயணம் செய்த நபர்கள் வேறு யாரேனும் இருந்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. விபத்து பற்றி நான்தான் பெருந்துறை காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார்தான் நான் பெருந்துறை காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாராகும். (**அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** விபத்து நடந்த ரோடு கோவை – சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் என்னவென்றால் அதிகாலை 03.30 ல் இருந்து 03.45 இருக்கும். விபத்து நடந்த இடத்திற்கு அருகே பெத்தாம்பாளையம் பிரிவு உள்ளது என்றால் சரிதான். இந்த பெத்தாம்பாளையம் பிரிவானது பெத்தாம்பாளையம் ரோட்டிற்கு வடபுறமாக உள்ளது என்றால் சரிதான். என்னுடைய கடையானது இந்த பிரிவு ரோட்டிற்கு மேற்கு பக்கமாக பைபாஸ் ரோட்டில் தெற்கு பார்த்தால் உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் பேக்கரியில் இருந்து சுமார் 300, 400 அடி தூரம் கிழபுறமாக உள்ளது என்றால் சரிதான்.

2) விபத்து நடந்தவுடன் சத்தம் கேட்டு முதலில் நான் மட்டும்தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சத்தம் கேட்டுதான் சென்று பார்த்தேன். விபத்து யாரால் என்ன காரணத்தால் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் சொல்லி புகார் கொடுத்தேன் என்றால் நானாகத்தான் கொடுத்தேன்.

.

**மறுவிசாரணை**

இல்லை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **146-2012** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.2** | Prosecution /Defence / Court | |
| Name | **Krishnasamy** | Caste | |
| Father's Name | **Kandasamy** | Calling | |
| Village | **Mettupalayam,S.V.Colony,** | Religion | |
| Taluk | **Tirupur** | Age | |

**Accused present**.
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 13.08.2024**

**முதல் விசாரணை**

1) நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து திருப்பூரில் சொந்தமாக பனியன் கம்பெனி வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது அண்ணன் மகன் ஆவார். அவரது மனைவியின் பெயர் கீதா. சுமார் 13 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் எனது அண்ணன் மகன் செல்வராஜ் கார் விபத்து நடந்ததாக தகவல் கேட்டு விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தேன். காரில் வந்த ருக்குமணி, பழனிச்சாமி, வீராச்சாமி, செல்வராஜ், கீதா ஆகியோர்களுக்கு காயம் இருந்தது. காயம்பட்ட நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக லோட்டஸ் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். விபத்தில் அடிபட்ட கீதா மருத்துவமனையில் இறந்துவிட்டார். போலீசார் மருத்துவமனை வந்து இறந்தபோன கீதாவின் பிரேதத்தை பார்வையிட்டு விசாரித்தார்கள். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **146-2012** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.3** | Prosecution /Defence / Court | |
| Name | **Veerasamy** | Caste | |
| Father's Name | **Thangaiya Chettiar** | Calling | |
| Village | **Indira Nagar** | Religion | |
| Taluk | **Tirupur** | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 13.08.2024**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது மைத்துனன் ஆவார். அவரது மனைவியின் பெயர் கீதா. கடந்த 01.07.2013 ம் தேதி வெள்ளிக்கிழமை நானும், எனது மனைவி ருக்மணி, ஆஜர் எதிரி செல்வராஜ் மற்றும் அவரது மனைவி கீதா, ஆஜர் எதிரியின் மாமனார் செல்வராஜ் ஆகியோர் செல்வராஜின் குல தெய்வ கோவிலுக்கு கோயம்புத்தூர் பைபாஸ் ரோட்டில் சென்று கொண்டிருந்தோம். அதிகாலை சுமார் 4 மணியிலிருந்து 5 மணிக்குள் நான் காரில் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது சத்தம் கேட்டது. கண் விழித்து பார்த்தபோது நாங்கள் பயணம் செய்த கார் விபத்துக்குள்ளாகியிருந்தது. அந்த கார் எவ்விதம் விபத்துக்குள்ளானது என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த காரை

.

ஆஜர் எதிரி செல்வராஜ் ஓட்டி வந்தார். எனக்கு வலது கை மணிக்கட்டிலும், வலது முகத்திலும், வலது முழங்காலிலும் காயங்கள் ஏற்பட்டது. விபத்தின் போது செல்வராஜ்க்கும் காயம் ஏற்பட்டிருந்தது. என்னை கார் கதவை உடைத்து தான் என்னை எடுத்தார்கள். நான் பார்க்கும் போது கீதாவை ரோட்டில் படுக்க வைத்திருந்தார்கள். காயம்பட்ட எங்களை முதலில் ஆம்புலன்ஸ் மூலம் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். பின்னர் மேல்சிகிச்சைக்காக ஈரோடு லோட்டஸ் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் மருத்துவமனையில் இருந்தபோது கீதா இறந்துவிட்டதாக தகவல் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** விபத்து நடந்த ரோடு சேலம் – கோவை நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் அதிகாலை சுமார் 4 மணியளவில் நடந்தது. விபத்து நடந்த நேரத்தில் அதிகாலை என்பதால் நான் தூங்கி விட்டேன். விபத்து நடந்த சத்தம் கேட்டுதான் நான் எழுந்து பார்த்தேன். அதனால் விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. விபத்து பெத்தாம்பாளையம் பிரிவு ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். விபத்தின்போது நாய் ஏதாவது குறுக்கே வந்ததா என்ற விவரம் எனக்கு சரியாக தெரியவில்லை.

**மறு விசாரணை**

**இல்லை.**

.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **146-2012** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.4** | Prosecution /Defence / Court | |
| Name | **Rukmani** | Caste | |
| Husband's Name | **Veerasamy** | Calling | |
| Village | **Indira Nagar** | Religion | |
| Taluk | **Tirupur** | Age | |

**Accused present**.
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 13.08.2024**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.3 எனது கணவர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது அண்ணன் மகன் ஆவார். அவரது மனைவியின் பெயர் கீதா. கீதா எனது அண்ணி. கடந்த 01.07.2013 ம் தேதி வெள்ளிக்கிழமை நானும், எனது கணவர் வீராசாமி, ஆஜர் எதிரி செல்வராஜ் மற்றும் அவரது மனைவி கீதா, ஆஜர் எதிரியின் மாமனார் பழனிச்சாமி ஆகியோர்கள் செல்வராஜின் குல தெய்வ கோவிலுக்கு கோயம்புத்தூர் பைபாஸ் ரோட்டில் சென்று கொண்டிருந்தோம். அந்த காரை எனது அண்ணன் செல்வராஜ்தான் ஓட்டி வந்தார்.

2) அதிகாலை சுமார் 4 மணியளவில் நான் வந்து கொண்டிருந்த கார் திடீரென விபத்துக்குள்ளானது. அப்போது நான் காரில் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது சத்தம் கேட்டது. கண் விழித்து பார்த்தபோது

நாங்கள் பயணம் செய்த கார் விபத்துக்குள்ளாகியிருந்தது. அந்த கார் எவ்விதம் விபத்துக்குள்ளானது என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த காரை ஆஜர் எதிரி செல்வராஜ் ஓட்டி வந்தார். எனக்கு இடது பக்க தலை, இடுப்பு, நெற்றி ஆகிய இடங்களில் அடிபட்டது. எனது கணவருக்கு வலது கை மணிக்கட்டிலும், வலது முகத்திலும், வலது முழங்காலிலும் காயங்கள் ஏற்பட்டது. விபத்தின் போது செல்வராஜ்க்கும் கை, கால்களில் காயம் ஏற்பட்டிருந்தது. விபத்தின்போது என் அண்ணி கீதா சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாக சொன்னார்கள். என்னை ஈரோடு லோட்டஸ் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் சென்றார்கள். அங்கு 2 நாட்கள் நான் சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரித்தார்களா என்று ஞாபகமில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** விபத்து சேலம் – கோவை நெடுஞ்சாலை ரோட்டில் பெத்தாம்பாளையம் பிரிவு பகுதியில் நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த நேரத்தில் அதிகாலை என்பதால் நான் தூங்கி விட்டேன். விபத்து நடந்த சத்தம் கேட்டுதான் நான் எழுந்து பார்த்தேன். அதனால் விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. விபத்தின்போது நாய் ஏதாவது குறுக்கே வந்ததா என்ற விவரம் எனக்கு சரியாக தெரியவில்லை.

**மறு விசாரணை**

**இல்லை.**

.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **146-2012** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.5** | Prosecution /Defence / Court | |
| Name | **Shanmugam** | Caste | |
| Husband's Name | **Palanisamy** | Calling | |
| Village | **Pichampalayam** | Religion | |
| Taluk | **Tirupur** | Age | |

**Accused present**.
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 13.08.2024**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு உடல்நிலை சரியில்லாததால் தற்போது வேலைக்கு செல்வதில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 01.07.2011ம் தேதி விபத்து வழக்கிற்காக இந்த கையொப்பத்தை செய்தேன். பெருந்துறை தாண்டி உள்ள ஒரு டீக்கடையில் நான் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அதிகாலை சுமார் 03.30 மணிக்கு மேல் நான் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது விபத்து நடந்ததாக சொன்னார்கள். போலீசார் விபத்து நடந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டார்கள். அது சம்மந்தமாக விசாரணையும் செய்தார்கள். அப்போது நான் உடனிருந்தேன். **(பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) காரில் பயணம் செய்த பழனிச்சாமி எனது அப்பா ஆவார். நான் கையொப்பம் செய்த பேப்பரில் எழுதியிருந்த விவரம் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்.

**மறு விசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை